## பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்
## முன்னிலை – திரு.P.துளசிராமன்

ந.க.எண். **06/2023** ஊராட்சி நிர்வாகம் நாள் : **17.08.2023**

பொருள்:-

மனைப்பிரிவு அங்கிகாரம் நாமக்கல் மாவட்டம் – எருமப்பட்டி வட்டாரம் – பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சி, பொட்டிரெட்டிப்பட்டி கிராமம் – சர்வே எண் **384/2,384/4B – ல் 3.1739** ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:-

1.அரசாணை (நிலை) எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3) துறை நாள் - 04.05.2017

2.அரசாணை (நிலை) எண்.112, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3) நாள் - 22.06.2017

3.அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ.4(2) நாள் - 04.06.2004.

4.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடித இ.ந.க.எண்.**NKL/XUYZWHXC/3689/2022/TCB** நாள் : **06.05.2023**

5.தானப்பத்திர ஆவண எண்.**957/2023** நாள் – **26.04.2023**.

6.தனியாரால் வழங்கப்பட்ட ரூ.20/- க்கான உறுதிமொழி பத்திரம்.

7.கூராய்வுக் கட்டணமாக பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சிக்கு செலுத்திய நாள் -20.07.2023 (பலவகை இரசீது எண். ( 013822 )

8.நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் (3% Market value) செலுத்தப்பட்ட இசலான் எண் **20230720023225/20.07.2023**

**********

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி வட்டாரம் பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சி பொட்டிரெட்டிப்பட்டி கிராம் சர்வே எண்கள்: **384/2, 384/4B** – ல **3.1739** ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தப்பட்டு நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு SWP/DTCP/NKL/Layout No.**160/2023**இல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைபிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 5 இல்காணும் தானப்பத்திரம் மூலம் எருமப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சி மன்றத் தீர்மான எண் **215/2023** நாள் 16.06.2023 இன்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்று கொள்ளப்பட்டதிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்க சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும் உட்பிரிவு கட்டணத் தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை – 6 இல் கண்டுள்ளவாறு ரூ.20/- கான ஒப்புதல் பத்திரம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

பார்வை – 7-ல் கண்டுள்ளவாறு கூராய்வு கட்டணம் **63** மனைகளுக்கு ரூ.**63000**/- **(ரூபாய் அறுபத்து மூன்றாயிரம் மட்டும்)** மற்றும் மனை உட்பிரிவிற்கு 3% Market value கட்டணம் பார்வை 8-ல் கண்டுள்ளவாறு ரூ.**19100**/- **(ரூபாய் பதினொன்பதாயிரத்து நூறு மட்டும்)** உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு வரைபட தொழில் நுட்ப அனுமதி SWP/DTCP/NKL/Layout No.**160/2023**-ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள், மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

P. [signature] 17/06/2023

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
பொட்டிரெட்டிப்பட்டி.

பெறுதல்

திரு.A.K. சத்யமூர்த்தி,
த/பெ கருப்பண்ணன்,
நாமக்கல்.

நகல்

1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் (அவர்களுக்கு பணிந்து அனுப்பபடுகிறது)
2.சார்பதிவாளர்அலுவலகம், எருமப்பட்டி நாமக்கல் மாவட்டம். (அவர்களுக்கு அனுப்பபடுகிறது)

பொட்டிரெட்டிபட்டி ஊராட்சியின்

## கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதி வெள்ளி கிழமை

காலை / மாலை 10.30 மணிக்கு சாதாரண / சிறப்பு / அவசரக் கூட்டம்

பொட்டிரெட்டிபட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தலைவர் திரு.பி. தனபாலன்

அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைவர் உட்பட கூட்டத்திற்கு ஆஜரான உறுப்பினர்கள் 12

| பொருள்: 6 | தீர்மானம்: 215/2023 |
|---|---|
| பொட்டிரெட்டிபட்டி கிராமம் சர்வே எண். 384/2, 384/4 ல் 3.1739 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டது. மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் தெரு, முடக்கு பூங்கா, பொது இடம் உட்பட அனைத்தும் ஊராட்சிக்கு திரு. A.K. சத்தியமூர்த்தி என்பவர் தானப்பத்திரம் மூலம் ஒப்படைத்ததை மன்றம் அங்கீகரிக்கிறது. | அங்கீகரிக்கப்பட்டது. |

P. Dhanapal
தலைவர்
ஊராட்சி மன்றம்,
பொட்டிரெட்டிபட்டி.

/ உண்மைநகல் /